கல்வி நிதிக்காக......

இதழின் விலை : ரூ.2.50

# குருகுலத் தென்றல்

- அடிப்படைவாத ஆன்மீகம்
- அரசியல் ஆன்மீகம்
- அறிவியல் ஆன்மீகம்

தீபம் - 11

சுடர் - 31

09-07-2026



ராஜாமாதா அகல்யா பாய்

வல்லமை தாராயோ – இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே

ஆசிரியர் : டாக்டர்.V.K.S.சிவசக்தி பாலன் M.B.B.S.,Dc.C.H.,


R. Karthik Prabhu M.S.,
V. Ravindran B.Com
S. Velayutham & Co.,

99449 70954
99449 70951
99449 70953

VELAYUTHAM TRADING COMPANY

S. VELAYUTHAM & Co

பட்டாசு மூலப்பொருட்கள் வியாபாரம்

Business in : Fireworks Raw Materials.

e-mail : velayuthamravi75@gmail.com

3/666/38, Sattur Main Road, Sivakasi - 626 189.

सेन्थिल

Enjoy Your Memorable Moments with...

# SENTHIL'S

## Fancy Fireworks & Crackers



KALAIMAAN™ REGD. NO: 2392499

LEO BRAND

## SENTHIL FIREWORKS INDUSTRIES


411-A, Kamarajar Road, Sivakasi - 626123.
Ph : 04562 221394, 2223941
Email : senthilfw@yahoo.com

# வேதம் புதுமை செய் - 2

**(01-2-2026) அன்று சிவகாசி அனுப்பங்குளத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராம்ஜி பாலிபேக்ஸ் வளாகத்தில் நடைபெற்ற ஹிந்து ஒற்றுமைத் திருவிழாவில் குருகுலத்தென்றல் ஆசிரியர் டாக்டர்.V.K.S.சிவசக்திபாலன் வழங்கிய தலைமையுரை.**

நமது வேதங்கள் பிரம்மாவை நம்மை விட மூன்று கோடியே பதினோரு லட்சத்து நாலாயிரம் கோடி மடங்கு பெரியவர் என்று விவரிக்கின்றன.

இது இங்கு எத்தனைப் பேருக்குத் தெரியும்?

ஹிந்து ஒற்றுமை வேண்டி இங்கு கூடியுள்ளீர்கள். ஆனால் ஹிந்து வேதங்கள் என்ன கூறுகின்றன என்பதே நமக்குத் தெரியாது. எனவே தான் மாற்று மதத்தினர் நமது தெய்வங்களைச் சாத்தான் என்று கூறும் போது நமக்குச் சொரனையே வருவதில்லை.

மறுபடியும் சொல்கின்றேன் –

நமது பிரம்ம தேவன் – நமது திரைப்படங்களில் பொம்மை தலை – களுடன் காட்டப்படும் நமது பிரம்ம தேவன் நம்மை விட மூன்று கோடியே பதினோரு லட்சத்து நாலாயிரம் கோடி மடங்கு பெரியவர்.

நமது பிரம்ம தேவனுக்கு ஒரு நாள் என்பது நம்முடைய 864 கோடி வருடங்களாகும்.

ஒரு சதுர்யுகம் என்பது 43.2 லட்சம் வருடங்கள் என்று நமது வேதங்கள் கூறுகின்றன. 1000 சதுர்யுகம் – அதாவது 432 கோடி வருடங்கள் பிரம்மாவிற்கு ஒரு பகல்பொழுது என்று நமது வேதங்கள் கூறுகின்றன. இதே போல் 432 கோடி வருடங்கள் – அதாவது 1000 சதுர்யுகம் பிரம்மாவிற்கு ஓர் இரவு ஆகும்.

பிரம்மாவிற்கு நமது 864 கோடி வருடங்கள் ஒரு நாள் ஆகும் – இவ்வாறு 100 ஆண்டுகள் பிரம்மா உயிருடன் இருப்பார்.

இதைக் கூட்டி கழித்து பெருக்கி வகுத்துப் பாருங்கள்–

நம்ம பிரம்ம தேவன் நம்மை விட மூன்று கோடியே பதினோரு லட்சத்து நாலாயிரம் கோடி மடங்கு பெரியவர் என்பது புரியும்.

நமது அண்டம் எவ்வளவு பெரியது என்பதை இன்று விஞ்ஞானம் தெளிவாய் கூறுகின்றது – அதைப் புரிந்து கொண்டு ஹிந்து வேதங்கள் கூறும் பிரம்ம தேவனின் விஸ்தீரனத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

நமது பிரம்ம தேவனிடமிருந்து தான் அண்டத்தில் உள்ள பெரிய பெரிய நட்சத்திரங்கள் – சூரியன்கள் – கிரகங்கள் – பூமிகள் வெளிப்பட்டன – என்று நமது வேதங்கள் கூறுகின்றன.

விஞ்ஞானம் கூறும் பெரும் வெடிப்பு தியரி – "Big Bang" தியரி - ஆதியில் நெபுலார் என்னும் நெருப்புக் கோளம் இருந்தது – அது வெடித்துச் சிதறிய போது – நட்சத்திரங்கள், சூரியன், கிரகங்கள் தோன்றின – என்று கூறுகின்றது.

விஞ்ஞானம் கூறும் நெபுலார் என்னும் நெருப்பு கோளம் –ஏறத்தாழ நமது ஹிந்து வேதங்கள் கூறும் பிரம்ம தேவனுடன் ஒத்துப் போகின்றன.

விஞ்ஞானம் நெபுலார் என்னும் நெருப்புக் கோளம் வெடித்துச் சிதறியதால் சூரியன் – நட்சத்திரங்கள் – கிரகங்கள் தோன்றின என்று கூறுகின்றது. நமது ஹிந்து வேதங்கள் பிரம்ம தேவனால் சூரியன் – நட்சத்திரங்கள் – கிரகங்கள் மற்றும் உயிர்கள் படைக்கப்பட்டன என்று கூறுகின்றன.

நான் ஏன் நெபுலார் என்னும் நெருப்புக் கோளத்தை பிரம்ம தேவனுடன் ஒப்பிடுகின்றேன் என்பதை அடுத்து நான் கூறுவதைக் கொண்டு யூகித்து அறிந்துக் கொள்ளுங்கள்.

சூரியனால் தான் தாமரை மலரும்

தாமரைக்கும் சூரியனுக்கும் நேரடித் தொடர்பு உண்டு

சத்தியமாய் நான் அரசியல் பேசவில்லை

நமது ஹிந்து வேதங்களில் கூறப்பட்டுள்ள ஒரு மிகப்பெரிய மகத்துவத்தைக் கூறுகின்றேன் – நிதானமாய் அது பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

மிக மிக வெம்மை மிகுந்தவைகளைத் தாமரை பூக்களேத் தாங்குவதாய் நமது ஹிந்து வேதங்கள் கூறுகின்றன.

முழு முதற்கடவுளாகிய சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய நெருப்புப் பொறிகளை எடுத்துச் சென்ற வாயுபகவான் வெம்மை மிகுந்த அந்த நெருப்புப் பொறிகளை தாமரைப் பூக்களில் தான் விட்டுச் சென்றதாய் நமது ஹிந்து புராணங்கள் கூறுகின்றன.

தாமரைப் பூக்களினாலேயே அந்த நெருப்புப் பொறிகள் குளிர்விக்கப்பட்டு ஸ்ரீ முருகப் பெருமானாய் உருவாக்கப்பட்டன.

நமது ஹிந்து வேதங்களில் மறைந்துள்ள இந்த இரகசியத்தை நிதானமாய் ஆராய்ந்து பாருங்கள்.

நமது ஹிந்து வேதங்களில் மிக மிக வெம்மை மிகுந்தவைகளைத் தாங்கும் சக்திகளாய் தாமரைப் பூக்களே உருவகப் படுத்தப்பட்டுள்ளன என்கின்ற மகத்தான உண்மையை உணர முயற்சிச் செய்யுங்கள்.

சாதாரண நமது சூரியனின் வெப்பநிலை 2.7 கோடி டிகிரி பாரன்ஹீட் ஆகும். சூரியனைப் போல் எண்ணிலடங்காத நட்சத்திரங்களைத் தம்மிடமிருந்து வெளிப்படுத்திய பிரம்மதேவனின் வெப்பநிலை எவ்வளவு பிரம்மாண்டமான தாய் இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

நமது பிரம்ம தேவன் எதில் தோன்றினார் தெரியுமா?

ஸ்ரீ விஷ்ணு பகவானின் நாபிக் கமலத்தில் தோன்றினார். கமலம் என்றால் தாமரை. எண்ணிலடங்காத நட்சத்திரங்களைத் தம்மிடமிருந்து வெளிப்படுத்திய மிக மிக வெம்மை மிகுந்த பிரம்மா ஸ்ரீ விஷ்ணு பகவானின் நாபியில் முளைத்த தாமரைப்பூவில் தோன்றினார்.

(தொடரும்)

With Best Compliments From

சரியான விலை — சிறப்பான சேவை

04562–245857
248857
243766.

KSM

98430–74586
94421–45857
94434–40805

# C. குமரேசன் அன் கோ.,

# ஸ்ரீ ஹரி அன் கோ.,

# ஸ்ரீ முருகன் டிம்பர் டிப்போ.,

# C. சரவணன் ஸ்டீல் மார்ட்.,

73/4-A, புல்லலக்கோட்டை ரோடு,
விருதுநகர்.

**சிமெண்ட், ஸ்டீல்ஸ், சேனிடரி&செராமிக் டைல்ஸ்**

Birla White
Bell
JOHNSON Not just tiles, Lifestyles.
jaquar experience bathing
Marbonite STAINFREE
VISAKA
UltraTech CEMENT The Engineer's Choice
Parryware
Sintex
AGNI STEELS PRIVATE LIMITED
THE INDIA CEMENTS LTD
isteel forever

# இருதய நோய்கள்

பலரது இதயத்தைப் பாதிப்பது அதிக கொலஸ்ட்ரால் அல்லது உயர் இரத்த அழுத்தம் மட்டும் தான் என்று நினைக்கிறார்கள். ஆனால், அதிகம் அறியப்படாத சில இதய நோய்களும் இதயத்தைக் கடுமையாக பாதிக்கக் கூடும்.

**1.கார்டியாக் அமிலாய்டோசிஸ் (ATTR-CM)**

சில புரதங்கள் இதயத்தில் படிந்து, இதயம் இறுக்கமாக மாறி, சரியாக இரத்தத்தை நிரப்பவும் பம்ப் செய்யவும் சிரமப்படலாம்.

அறிகுறிகள்: மூச்சுத்திணறல், உடல் வீக்கம், கடுமையான சோர்வு, தலைச்சுற்றல், கைகள் மரத்துப்போதல்.

**2. SCAD (திடீர் கரோனரி தமனி கிழிவு)**

கொலஸ்ட்ரால் அடைப்பு இல்லாமலேயே இதய தமனியின் சுவர் கிழியலாம். இதனால் இளம் வயதினருக்குக் கூட மாரடைப்பு ஏற்படலாம்.

அறிகுறிகள்: நெஞ்சு வலி, மூச்சுத்திணறல், குளிர் வியர்வை, குமட்டல், இதயத் துடிப்பு அதிகரித்தல்.

**3. அரிக்மோஜெனிக் கார்டியோமயோபதி (ARVC)**

மரபணு காரணங்களால் இதய தசையின் ஒரு பகுதி கொழுப்பு அல்லது நார்த்திசுக்களால் மாற்றப்பட்டு, ஆபத்தான இதயத் துடிப்பு கோளாறுகள் ஏற்படலாம்.

அறிகுறிகள்: இதயப் படபடப்பு, மயக்கம், உடற்பயிற்சியின் போது சுய நினைவு இழத்தல், குடும்பத்தில் திடீர் மரண வரலாறு.

**4. மயோகார்டிடிஸ்** (இதயத் தசை அழற்சி)

இதயத் தசையில் ஏற்படும் அழற்சி, இதயத்தின் செயல்திறனையும் துடிப்பையும் பாதிக்கலாம். சில நேரங்களில் இது மாரடைப்பைப் போலவே தோன்றும்.

அறிகுறிகள் : நெஞ்சு வலி, புதிய மூச்சுத்திணறல், இதயப் படபடப்பு, மயக்கம், கடுமையான சோர்வு.

**5. உடைந்த இதய நோய்க்குறி (Takatsubo Syndrome)**

மிகவும் கடுமையான மனஅழுத்தம் அல்லது உடல் அழுத்தத்திற்குப் பிறகு இதயம் தற்காலிகமாக பலவீனமடைந்து, மாரடைப்பைப் போன்ற அறிகுறிகளை உருவாக்கலாம்.

அறிகுறிகள் : கடுமையான மனஅழுத்தத்திற்குப் பிறகு நெஞ்சு வலி மற்றும் மூச்சுத்திணறல்.

இந்த அறிகுறிகளை ஒருபோதும் அலட்சியப்படுத்தாதீர்கள்:

10 நிமிடங்களுக்கு மேல் நீடிக்கும் நெஞ்சு வலி

திடீர் மூச்சுத்திணறல்

மயக்கம் அல்லது கடுமையான இதயப் படபடப்பு

குளிர் வியர்வை, குமட்டல், "ஏதோ மோசமாக இருக்கிறது" என்ற உணர்வு

சில நேரங்களில் இதய நோய்களின் அறிகுறிகள் மிகவும் மெதுவாகவோ அல்லது பதட்டம், அஜீரணம், சாதாரண சோர்வு போலவோ தோன்றலாம். எனவே எந்த அறிகுறியையும் அலட்சியப்படுத்தாமல், தேவையானால் உடனடியாக மருத்துவரை அணுகுங்கள்.

**மூலிகைத் தென்றல்**

## ஆலமரம்

இது மிகவும் புனித மரமாகக் கருதப்படுகிறது.

அத்துடன் பல்வேறு நோய்களுக்கு இயற்கை மருந்தாக பயன்படுகிறது.

ஆலமரத்தின் இலை, பட்டை, பழம், விதை மற்றும் பிசின் ஆகியவை அனைத்தும் மருத்துவ பயன்களைக் கொண்டவை.

**1. ஆல இலை**

பயன்கள் :

மாரடைப்பு, ரத்த அழுத்தக் கட்டுப்பாடு

இரத்த ஓட்டத்தை சீரமைக்க உதவும்

ஆஸ்துமா மற்றும் சளி காய்ச்சலுக்கு நிவாரணம்

பசியை தூண்டும், ஜீரணத்தை தூண்டும்

பயன்பாடு :

ஆல இலை தணலில் சுடவைத்து தேனில் கலந்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் மாரடைப்பு, இரத்தக் கொதிப்பு குறையும்.

**2. ஆல மரப்பட்டை (bark)**

பயன்கள் :

வாத நோய்களுக்கு மருந்து

குடல் நோய்கள் மற்றும் வயிற்றுப் புண்கள்

நீரிழிவு கட்டுப்பாடு

பயன்பாடு:

ஆல மரப் பட்டையை கொதிக்கவைத்து அதை காலை, மாலை பருகினால் சர்க்கரை அளவு கட்டுப்பாட்டில் இருக்கும்.

**3. ஆல மரத்தின் பிசின்**

பயன்கள் :

கை கால் வலிகள்

முடி வளர்ச்சிக்கு ஊக்கமாக செயல்படுகிறது

மூலநோய்களில் நிவாரணம் அளிக்கிறது.

பயன்பாடு:

பிசினை சிறிது எடுத்து தேனில் கலந்து உட்கொள்வதால் மூல வியாதிக்கு நிவாரணம் கிடைக்கும்.

**4. ஆலமரப் பழம் (அத்திப்பழம் - பிபேல் பழம்)**

பயன்கள் :

மலச்சிக்கல் நீங்கும்
ரத்தத்தை தூய்மைப்படுத்தும்
சிறுநீரக நோய்களுக்கு நிவாரணம்
பாலுணர்வு குறைபாடு போக்கும்

பயன்பாடு :

பழங்களை உலர்த்திப் பொடி செய்து தினமும் ஒரு ஸ்பூன் தேனில் கலந்து சாப்பிடலாம்.

**5. ஆல மரவிதை**

பயன்கள் :

வறட்சி, வலிகள், ஆண்களின் பலவீனம்
பெண்களுக்கு மாதவிடாய் சீரமைப்பு

பயன்பாடு:

ஆலமர விதையை நிழலில் உலர்த்தி பொடி செய்து சூர்ணமாகக் கொண்டு பாலில் கலந்து குடிக்கலாம்.

மனோவியில் நன்மைகள் :

ஆலமரம் அருகே அமர்ந்திருப்பது மன அமைதியைக் கொடுக்கும்.

அதன் ஆழமான வேர்கள் பூமியோடு தொடர்பு ஏற்படுத்துவதால், மன அழுத்தம் குறையும்.

ஆல இலை மற்றும் பழங்களை அளவுக்கு மேல் பயன்படுத்தக் கூடாது.

கர்ப்பிணி பெண்கள் பயன்படுத்தும் முன் மருத்துவரின் ஆலோசனை பெறவேண்டும்.

பாரம்பரிய நம்பிக்கை:

ஆலமரம் கீழே தவம் இருப்பது சக்தியைக் கூட்டும்

இந்த மரத்தின் ஒவ்வொரு பாகமும் தெய்வீகத்தன்மையுடன் ஆன்மிக சக்தி கொண்டதாக மதிக்கப்படுகிறது

*With Best Compliments From*

**"குருகுலத் தென்றல்" மென் மேலும் வளர**

**எங்களின் இனிய வாழ்த்துக்கள்**



**D.சண்முகக்கனி**

*Cell : 98437 25311*

# சின்னத்தம்பி கிளாஸ் ஹவுஸ்

**210-B, Police Station Road**

**Near Chartities Kalyana Mandabam**

**Sivakasi-626 123**

**எங்களிடம் தரமான கண்ணாடி, சன்மைக்கா, பிளைவுட், அனைத்து வகை இரும்பு சாமான்கள் பெவிகால், அலுமினிய சாமான்கள் கிடைக்கும்.**

**மிகச் சிறந்த முறையில்**

**அலுமினிய பார்டிசன் செய்து தரப்படும்.**

# ராஜ மாதா அகல்யா பாய்

சிவாஜி ஸ்தாபித்த, 1688ல் சாம்பாஜியின் மரணத்தோடு இந்து ராஜ்யம் முடிவுக்கு வந்தது மறுபடி தேசம் மொகலாயரின் முழு ஆளுகைக்குள் சென்றது.

அவுரங்கசீப் வெற்றி பெற்றிருந்தான், சிவாஜி எனும் பெரும் சவாலை முழுக்க அடக்கி தன் வெற்றிகொடியினை நாட்டியிருந்தான்.

சிவாஜியின் மகன்களும் இல்லை, இனி என்னை வெல்ல யாருமில்லை என கொக்கரித்துகொண்டிருந்தான்.

ஆனால் தர்மம் அவன் வம்சத்தில் ஆண்கள் இல்லாவிட்டால் என்ன? பெண்கள் உண்டு என காட்டிற்று

உலக சக்கரவர்த்தி என நின்ற அந்த அவுரங்கசீப் இந்துஸ்தான வீரபெண் களிடம் தோற்க ஆரம்பித்தான். அதனை தொடங்கிவைத்தவள் சிவாஜி மருமகள் தாராபாய்.

அவள் நடத்திய வீரபோர்கள் மறுபடி இந்து ராஜ்யத்தை எழவைத்தன.

அதன் பின் இந்துக்கள் பெரும் எழுச்சி பெற்றனர். தாராபாய் தொடங்கி வைத்த எழுச்சி இந்து அரசுகளை ஏற்படுத்திற்று.

சிவாஜியின் பெரும் வியூகம் இந்துராஜ்யம் என்பது அவன்மட்டுமல்ல, யாரெல்லாம் தகுதியான இந்துக்களோ அவர்களையெல்லாம் ஆட்சிக்கு கொண்டுவந்து அரசர்களாக்குவது.

அப்படி பல இந்து அரசர்களை உருவாக்கினான். இட்டேரி நாயக்கர், மைசூர் நாயக்கர், தஞ்சை மராட்டியர் என அவனால் உருவானார்கள்

வடக்கே அப்படி உருவானது இந்தூர் சமஸ்தானம் அதன் அரசர் மல்கேல்ரா ஹோல்கர், இவரின் மருமகள் அகல்யாபாய் ஹோல்கர்.

கணவனும் மாமனாரும் இல்லா நிலையில் 1767ல் ஆட்சிக்கு வந்தார் அகல்யாபாய். மிக சிறிய இந்தூர் சமஸ்தானத்தை தன் வீரத்தால் வளர்த்தார்.

வீரசிவாஜி,தாராபாய்க்கு பின் அவர் பெரும் இந்து ராணியாக உருவெடுத்தார்.

அந்த 1760களில் மொகலாயம் பெரிதாக நொறுங்க தொடங்கியது.

சீக்கியர்களும் மராட்டியரும் சேர்ந்து முடிவுரை எழுத தொடங்கினார்கள். அகல்யாபாய் அதில் முன்னால் நின்றாள்.

அவளின் வீரமும் தைரியமும் கொஞ்சமல்ல. வீரசிவாஜி விட்டுசென்ற கனவான காசி ஆலயத்தை மீள கட்டுதல் என்பதை அவளே செய்தாள்.

பெரும்படை திரட்டி காசியினை மீட்டாள். மொகலாயரை வங்கம் பக்கம் விரட்டினாள், காசி அவளால் மீட்கபட்டது.

இன்றிருக்கும் அந்த காசி ஆலயத்தை அவளே நிர்மானித்தாள். 1780ம்

ஆண்டு அதை கட்டிமுடித்தாள், சீக்கிய மன்னன் ரஞ்சித்சிங் 100 கிலோ தங்கம் கொடுத்து அதன் கோபுரத்தை ஜொலிக்க வைத்தான்.

அதாவது சீக்கியமன்னன் ராணிக்கு கட்டுபட்டு நின்றான், அந்த அளவு இந்துஸ்தான ராணியாக நின்றாள் அகல்யாபாய்.

காசியின் படிதுறை இன்னும் பல ஆலயங்களை அவளே நிர்மானித்தாள்

மொகலாயரை மொத்தமாக முடக்கி நாட்டை விடுவித்தவளும் அவள்தான்.

மொகலாயரிடம் இருந்து அவளால் தேசம் மீண்டது விடுதலைபெற்றது.

இந்திய நாடாளுமன்றத்தில் அந்த செங்கோலுக்கு பக்கத்தில் வைக்கப் படும் முழு தகுதி அவள் வாளுக்கும் உண்டு. அவள்சிலைக்கும் உண்டு.

ஒருவகையில் அவள் ஜீஜாபாயின் மறுபிறப்பு. அந்த உத்வேகமும் வீரமும் இந்துபக்தியும் அவளிடம் அப்படி இருந்தது.

பாரத இந்து மகளிர் எப்படியானவர்கள் என துருக்கி சுல்தான்,பாரசீக சுல்தான், அரபு சுல்தான். உஸ்பெக் சுல்தான் என எல்லோருக்கும் மிரட்டலை கொடுத்து மொகலாயத்தை வீழ்த்தி காட்டியவள் அவள்.

சிவாஜி ஏற்றி வைத்த பெரும் நெருப்பை 100ம் ஆண்டில் உலக இந்து ஜோதியாக உயர்த்தியவள் அவள்.

'''நான் மறுபடி மறுபடி பிறந்து இந்துஸ்தானையும் இந்து மண்ணையும் காப்பேன்'' என சொல்லி உயிர்விட்ட அந்த ஜிஜாபாயின் ஆத்மவடிவுக்கு, இந்துஸ்தான ராணிக்கு தேசம் பெரும் அஞ்சலி செலுத்துகின்றது.

சுமார் 600 ஆண்டுகால சீரழிவு, அவுரங்கசீப்பின் வெறியாட்டம் ஆகிய வற்றுக்கு பின் காசி மீள அவள்தான் காரணம்.

.

1680களில் வீரசிவாஜி காசியினை மீட்கமுடியாமல் காலமாகி விட அவன் கனவை அடுத்த 100ம் ஆண்டில் நிறைவேற்றி காட்டியவள் அவள்தான்.

காசி கோவில் மட்டுமல்ல, உஜ்ஜைனி கோவில், துவாரகை கோவில், குஜராத்தின் சோம்நாத் கோவில் என எல்லாமும் அவளே மீட்டெடுத்தாள்.

இவளின் மாபெரும் ஆட்சியில்தான் நாடு முழுக்க சுல்தான்கள் அடி வாங்கினார்கள் அல்லது பிரிட்டிசார் சுல்தான்களை வெல்ல ரகசிய அனுமதி கொடுத்தாள்.

ராணியின் கட்டுபாட்டிலே மராட்டியம் இருந்தது பிரிட்டிசாரின் முக்கிய துறைமுகம் பம்பாய் அங்கேதான் இருந்தது.

ராணி அதனை அனுமதித்தாள் அதனாலே பிரிட்டிலாரால் ஆற்காடு நவாப், ஐதரபாத் நிஜாம், வங்க உத்தவுலா என எல்லோரும் அடக்கப் பட்டார்கள்.

ஆனால் இதுவே அடுத்த 100 ஆண்டுகளில் இந்தியா பிரிட்டிசார் ஆளுகைக்குள் செல்லும் படி ஆக்கியது.

இந்துக்கள் வரலாற்றிலும் இந்திய வரலாற்றிலும் ''ராஜமாதா'' என உயர்ந்து நிற்பவள் அகல்யாபாய்

*With Best Compliments From*

# Ramsons Fireworks

189-I, Palaniandavarpuram Colony, **SIVAKASI - 626 189.**

Phone : 04562-222980, 227480, Fax : 04562-227180

Mobile : 94433-88980

*Always use LAMP Brand Crackers to enjoy Festivals.*

# A.R. TRAVELS

189-I, Palaniandavarpuram Colony,
**SIVAKASI - 626 189.**

Phone : 04562-222980, 227480, Mobile : 94433-88980

*Enjoy tours and travels with our A/c & Non A/c Car & Van*

***VEHICLES AVAILABLE :***

*Ambassador Car A/c & Non - A/c, Sumo A/c, Indica A/c,*
*Tavera A/c, Bolero A/c, Swaraj Mazda Van,*
*Mahindra Van, Tempo Traveller A/c, DVD*

காசி உள்ளிட்ட ஆலயங்களில் அவளின் நினைவுகளோடு நன்றி அஞ்சலி செலுத்தபடுகின்றது.

சிவாஜி தொடர்போல அவள் வரலாற்றையும் எழுதலாம். அந்த வரலாறு ஒவ்வொரு இந்து பெண்ணும் அறியவேண்டிய பெரும் போராட்ட வாழ்வு, இந்து பெருவாழ்வு.

“இந்திய ராணி” அகல்யாபாயின் நினைவுகள் எப்போதுமே சிலிர்ப் பானவை. வரலாற்றில் மொகலாயரா இந்துக்களா யார் வென்றார்கள் என்றால் இந்துக்கள்தான் வென்றார்கள்.

அதுவும் இந்து பெண்களே மொகலாயரை ஓட அடித்து நாட்டையும் மதத்தையும் மீட்டார்கள் என்பதுதான் சுவாரஸ்யம்.

அப்படிபட்ட இந்துமதத்தை பெண் அடிமை மதம், பெண்களை அடக்கி வைத்த மதம் என்றெல்லாம் சொன்னது பிரிட்டிஷ் கால திரிபு, அதை சில பதர்கள் நம்பி திரிவதெல்லாம் காலத்தின் கோலம். அதெல்லாம் விரைவில் மாறும்.

சில ஈரவெங்காயங்களே இங்கே பெண்ணுரிமையினை பிரிட்டிசார் மூலம் கொடுத்தார்கள் என்பதெல்லாம் உலகின் மிகப் பெரிய காமெடியே ஆகும்.

பிரிட்டிசாருக்கே இங்கே யாசகமிட்டு வாழ வழி செய்தவள் இந்துபெண், இந்து ராணி என்பதுதான் வரலாறு.

## கெட்டிக்காரர்களின் பொய்யும் புகட்டும் -2

மே மாத இதழில் – பாரத கல்விக் கூடங்கள் – என்ற கட்டுரையில் அன்றைய ஆங்கிலேய அரசின் புள்ளி விவரப்படி அன்றைய குருகுலம் கல்வி முறையில் மிக அதிக அளவில் சூத்திரர்களே கல்வி பயின்றவர்கள் என்பதை ஆதாரங்களுடன் கூறும் “அழகிய மரம்” என்ற நூலின் விவரங்கள் வெளியிடப்பட்டன.

இது குறித்து மதிப்பிற்குரிய தமிழாகரர் திரு.தெ.முருகசாமி ஐயா அவர்கள் கூறிய கருத்துக்களுக்குப் பதிலளித்தேன். அதன் தொடர்ச்சி வருமாறு –

ஹிந்து வேதங்கள் மந்திரங்கள் துல்லியமாய் பிசிறின்றி தவறின்றி ஒலிக்கப்பட்டால் அண்டத்தில் நாம் நினைக்கும் பலனைப் பெற்றுத் தரும் ஆற்றல் கொண்டவைகள் – ஏட்டில் எழுதி வைத்தால் உச்சரிப்புக்கள் சிதைந்தும் மருவியும் போய் அதன் ஆற்றல் அழிந்து விடும் என்பதால் அந்தணர்கள் அதைப் போற்றி பாதுகாத்தனர். ஆனால் திருக்குறளினை வல்லோர்களும் வல்லுநர்களும் பலரும் ஏட்டில் எழுதி சொல்லிடினும் அதன் ஆற்றல் மறைந்தும் சிதைந்தும் போகவில்லை.

– என்பதே (தமிழாகரர் திரு.தெ.முருகசாமி ஐயா அவர்கள் கூறியுள்ள) இப்பாடலின் பொருளாகும்.

இப்பாடலின் பொருளினைத் தமிழாகரர் திரு.தெ.முருகசாமி ஐயா அவர்கள் திரித்து தகுதி இல்லை என்பதால் பிறர் படிக்க அந்தணர்கள் அனுமதிக்கவில்லை என்று கூறுவது மிகப்பெரிய குற்றமாகும்.

ஐயா அவர்கள் இதைத் தெரிந்தே வேண்டுமென்றே திரித்துக் கூறினார் களா? அல்லது ஐயா அவர்களுக்குத் தெரிந்ததே அவ்வளவு தானா என்பதை யாமறியோம் பராபரமே?

ஐயா அவர்கள் கூறியுள்ள :-

**"ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்**
**போற்றியுரைத்து ஏட்டின் புறந்தெழுதார் - ஏட்டெழுதி**
**வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலை**
**சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று**

- கோதமனார் (திருவள்ளுவமாலை 5வது பாடல்)

- என்ற இப்பாடலின் பொருளினை ஏறத்தாழ ஒத்துப் போகும் பொருளினை கொண்ட பாடலைக் கம்பராமாயணத்தில் கவியரசு கம்பரும் எழுதியுள்ளார்.

**உழக்கும் மறை நாலினும் உயர்ந்து உலகம் ஓதும்**
**வழக்கினும் மதிக் கவியினும் மரபின் நாடி**
**நிழல் பொலு கணிச்சி மணி நெற்றி உமிழ் செங்கண்**
**தழல் புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்**

இப்பாடலின் பொருள் -

மிகக் கடினமான வேத மந்திரங்களையும் மற்றும்

**உயர்ந்தோர்கள் ஓதும் ஏனைய மந்திரங்களையும் மரபு சார்ந்த சார்ந்த அறிவு சார்ந்த செய்யுள் வடிவில் உலகம் அறிந்து கொள்ள நெற்றி யில் நெருப்பைக் கக்கும் சிவந்த கண்ணை உடைய சுடர் வடிவான சிவ பெருமான் அகத்தியர் மூலம் தமிழ் மொழியினை உலகிற்குத் தந்தார்,**

- என்பதாகும்.


வேதமந்திரங்களை ஓசை தவறாமல் ஒலி பிசகாமல் தவறின்றி உச்சரிப்பது கடினமானதாகும். தமிழ் செய்யுள்கள் மூலம் மரபு சார்ந்த அந்த மந்திரங்களைத் தமிழ் மொழியில் எளிதாய் ஓதலாம் என்பதே இப்பாடலின் உட்கருத்தாகும்.

ஐயா அவர்கள் குறிப்பிட்ட கோதமனார் திருவள்ளுவ மாலை 15- வது பாடலின் உட்கருத்தும் இப்பாடலின் உட்கருத்தும் ஒன்றேயாகும்.

வேத மந்திரங்களை எளிய பாமரமக்களும் அறியும் வகையில் தான் தமிழ் மொழினை முழுமுதற் கடவுள் தந்தான் என்பதே தமிழின் சிறப்பு ஆகும்.

வேத மந்திரங்களை வேத மொழியில் அளித்தவனும் முழுமுதற் கடவுளாகிய சிவனே யாகும். அதை எளிய பாமர மக்கள் உச்சரித்து அறியும் வகையில் தமிழ் மொழியினைத் தந்தவனும் அவனேயாகும்.

கோதமனார் கூறியுள்ள திருவள்ளுவ மாலை 15வது பாடலிலும் வேத மந்திரங்களின் ஆற்றல் - பெருமை கூறப்பட்டுள்ளது - அதே சமயம் திருக்குறள் கூறப்பட்டுள்ள தமிழ் மொழியின் சிறப்பும் கூறப்பும் கூறப்பட்டுள்ளது கம்பரின் பாடலிலும் "உயர்ந்து உலகம் செதும்" என்று வேத மந்திரங்களின் பெருமை கூறப்பட்டுள்ளது- அதே சமயம் தமிழின் சிறப்பும் கூறப்பட்டுள்ளது.



Best Compliments From
THRISUL
MUTHU
CRACKERS
THRISUL
TRADE MARK
BRAND
USE ALWAYS
MUTHU
FIREWORKS INDUSTRIES
Sri AYYAPPA'S
FIREWORKS INDUSTRIES
VAIRAM AGENCIES
90,North Car Street,SIVAKASI.

ஆனால் –

இன்று தம்மைத் தமிழாசிரியர்கள் – தமிழ் பேராசிரியர்கள் – தமிழ் அறிஞர்கள் என்று கூறிக் கொள்வோர் வேத மந்திரங்களையும் – வேத மொழி யினையும் இழித்தும் பழித்தும் இகழ்ந்தும் திரித்தும் பேசுவது மடமையே ஆகும். அல்லது மோசடியே ஆகும்.

தமிழாகரர் திரு.தெ.முருகசாமி ஐயா அவர்கள் தமிழ் பாடலின் பொருளினைத் திரித்து மறைத்து பொய்யுரைத்து எழுதியது குற்றமே ஆகும்.

ஐயா அவர்களின் கடிதத்தின் மீதி பகுதியினை அடுத்த இதழில் காண்போம்.

(தொடரும்)

**மூலிகைத் தென்றல்**

## பெண்களுக்கான கருப்பு எள்ளு

டாக்டர். **P.R.D.ஜெயபிரபா BSMS**., ஜெயராணி சித்தா கிளினிக்
**சாட்சியாபுரம், சிவகாசி. Ph : 94884 45251**

கருப்பு எள்ளு மாதவிடாய் நின்ற காலங்களில் பெண்களுக்கு மிகவும் பயன் உள்ளதாய் அமைகின்றது.

100 கிராம் கருப்பு எள்ளுவில் –

1. கார்போஹைடிரேட்
2. புரதம்
3. நல்ல கொழுப்புகள் (PUFA & MUFA)
4. நார்ச்சத்து
5. கால்சியம்
6. இரும்புசத்து

ஆகிய சத்துக்கள் இருக்கின்றன.

மேலும் மெக்னீசியம், பொட்டாசியம், ஜின்க் (Zinc), வைட்டமின் B6,B1,B3, ஆகிய சத்துக்களும் அடங்கியுள்ளன. இதனால் எலும்பிற்கு இரும்பு பலமும், இரத்தத்திற்கு இரும்பு சத்தும் கிடைக்கின்றன.

ஆன்டி – ஆக்ஸிடண்ட் என்னும் Lignans, செசாமின், செசாமோலின் என்ற வடிவில் Lhytoestrogen சத்துக்களை கொண்டுள்ளதால், மாதவிடாய் நின்ற பின் உள்ள estrogen இழப்பைச் சரி செய்து நிவர்த்தி செய்கின்றது.

கருப்பு எள்ளுவில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலையும், மலக்கட்டையும் போக்குகின்றது.

கருப்பு எள்ளுவில் உள்ள புரதம் உடம்பில் உள்ள செல்களுக்கு உயிர் ஊட்டுபவையாக செயல்படுகின்றன.

மாதவிடாய் நின்றபின் எலும்பு பலமின்மை, இரத்தக்குறைவு, முறையான இரத்த சுழற்சிக் குறைதல் போன்றவைகள் நாள்பட தெரிய வருகின்றன.

எனவே இம்மாதிரியான சூழ்நிலைகளைத் தவிர்க்க மாதவிடாய் நின்ற பின் (menopause காலங்களில்) தினமும் ஒரு எள்ளு உருண்டை சாப்பிட்டு வர நல்ல பலன் கிடைக்கும்.

எள்ளு உருண்டை – சித்த மருத்துவ செய்முறை

கருப்பு எள்ளு – 1 கப்
வெல்லம் – 3/4 கப்
ஏலக்காய் பொடி – சிறிதளவு

கருப்பு எள்ளுவை வாசம் வரும் வரை வறுத்து, அதன் பின்பு எள்ளுவை நன்கு அரைத்து எடுத்து வெல்லம் கலந்து ஏலக்காய் பொடி சேர்த்து நன்றாக பிசைந்து உருண்டையாக எடுத்துக் கொள்ளலாம்.

## 9.தொலைந்து போன பாரம்பரியங்கள்

டாக்டர்.எஸ்ஸெஸ்பி

மிருகங்கள் போகின்ற போக்கில் – அதன் பாதையில் தனது துணை களைத் தேடிக் கொள்கின்றன.

மனிதனுக்கு கடவுள் பகுத்தறிவினை அளித்துள்ளார்.

பகுத்தறிவு என்பது எதையும் ஏன் – எதற்கு – எப்படி – என்று ஆராய்ந்து அறியும் அறிவாகும். அந்த அறிவின் காரணமாகவே மனிதன் மிருகங்களிடம் இருந்து மாறுபட்டு அவற்றின் இயல்புகளுக்கு மேம் பட்ட நாகரீகம் கொண்டவனாய் இருக்கின்றான்.

அந்த நாகரீக வாழ்க்கை முறையே மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது.

நமது எந்த செயலையும் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பதே கடவுள் நமக்களித்துள்ள வரமாகும்.

ஆனால் இன்று தனது வாழ்க்கைத் துணையை ரோட்டோரங்களில் தேர்வு செய்யும் செயல்பாடு பெருகி வருகின்றது.

இன்றைய சினிமாக்கள், சமூக வலைதளங்களின் மூலம் இந்த செயல் பாடு தறிக்கெட்டத்தனமாய் தான் தோன்றித்தனமாய் கண்மூடித்தனமாய் வலிய திணிக்கப்படுகின்றது.

அதிலும் –

ரோட்டோர ரோமியோக்களின் மீது கொண்ட காதலுக்காக குடும்பத்தைப் பகைத்துக் கொள்வது – குடும்பத்தைக் தவிக்க விட்டு ஓடிப் போவது – சமுதாயத்தைப் பகைத்துக் கொள்வது – ஜாதி அமைப்பு முறையை உதாசீனப்படுத்துவது அல்லது தூக்கி ஏறிவது – இவையெல்லாம் தவறே இல்லை என்கின்ற ரீதியில் இளம் தலைமுறையின் அடிப்படை சிந்தனை கள் இவைகளால் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன. காதலுக்காக யாரையும் எதிர்த்து நிற்கலாம் என்கின்ற மனப்பாண்மை நம்மை அறியாமலேயே நம்மிடம் திணிக்கப்படுகின்றது.

சினிமாக்களில் பெரிதும் ரசிக்கப்படும் காதல் – ஏன் சமுதாய அரங்கில் நடைமுறைக்குச் சாத்தியமில்லாததாய் ஆகின்றது என்பதைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பாருங்கள்.

சினிமாக்களில் காதல் காட்சிகள் நமக்கு கிளுகிளுப்பை ஏற்படுத்து கின்றன – காதலர்கள் கஷ்டப்படும் போது நமது கண்களில் கண்ணீர்

வருகின்றது – கடைசியில் காதலர்கள் இணையும் போது நாம் ஆனந்தத்தின் உச்சத்திற்கே போய் விடுகின்றோம்.

ஆனால் –

சமுதாய அரங்கில் காதல் நடைமுறை சாத்தியங்களுக்கு அப்பாற்பட்டதாய் நமக்குத் தோன்றுகின்றது.

அது ஏன்?

சினிமாக்களில் காதலர்கள் இணைந்தவுடன் சுபம் போட்டு கதையை முடித்து விடுகின்றார்கள். காதலர்கள் உறவை வெறுத்து – ஊரைக் கொளுத்தி – எதிர்ப்பவர்களையெல்லாம் பந்தாடி இணைந்தவுடன் கதையை முடித்து விடுகின்றார்கள்.

ஆனால் –

வாழ்கை அத்துடன் முடிவதில்லை. வாழ்க்கை அதன் பிறகே தொடங்குகின்றது என்பதை சினிமா மாயையில் நாம் மெய் மறந்த விடுகின்றோம்.

வாழ்ந்து காட்ட வேண்டும் –

– அது தான் மனிதனின் அடிப்படை நோக்கம். பிறப்பின் இலட்சியம்.

ஆனால் –

காதல் செய்து பெரும் எதிர்பார்ப்புகளுடன் வாழ்க்கையைத் தொடங்கும் பலருக்கும் அது ஏமாற்றத்தையும் – சோகத்தையும் – விரக்தியையுமே ஏற்படுத்துகின்றது.

வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் அவர்களுக்கு வாழ்க்கையையே சிக்கலாக்கி விடுகின்றது.

வாழ்ந்து காட்டிய குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் – அம்மா, அப்பா மற்றும் உடன் பிறந்தோர் போன்றோர் வாழ்க்கையில் ஏற்படக் கூடிய சிக்கல்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து அறிந்தே காதலை வாழ்கைச் சிக்கலாகி விடக்கூடாது என்பதற்காகவே காதலை எதிர்க்கின்றார்கள்.

இந்த அனுபவ ரீதியாக ஏற்பட்ட அறிவில் காரணமாகவே நல்லெண்ணத்தில் அவர்கள காதலை எதிர்க்கின்றார்கள்.

சமுதாய அரங்கில் காதல் நடைமுறைக்குச் சாத்தியமில்லாததாய் இருப்பதின் அடிப்படை காரணமே இது தான்.

ஆனால் –

சினிமாக்களிலும் – சமூக வலை தளங்களிலும் ஒவ்வொரு மனிதனின் பாது காப்பு அரணாய் விளங்கும் சமுதாய அமைப்பைக் குறை கூறி வளரும் தலைமுறையின் சிந்தனையை முழுங்கடித்து விடுகின்றார்கள்.

முக்கியமாய் ஜாதியை மிகப்பெரிய பேயாய் சித்தரித்து காதலுக்காக யாரையும் எதிர்க்கலாம் என்கின்ற சித்தாந்தத்தை வளரும் தலைமுறையின் மனதில் விதைக்கின்றார்கள்.

இது குறித்து அடுத்த இதழில் விரிசாய் காண்போம். (தொடரும்)

# SRI ARUMUGAM'S



TWO ROSE **Sparklers, Chakkars, Flower Pots, Fancy items, Gift boxes, Color Matches and Roll Caps** TWO ROSE

TRADEMARK ® TWO ROSE REGISTRATION No. 397076

**SRI ARUMUGA BHAVAN**
No.212, Amman Koil Patti Middle Street,
Post Box No. 136, **SIVAKASI - 626 189.**
Website : www.arumugamfireworks.com
E-mail : arumugamfw.svk@gmail.com
Off : 04562-277277, 278277




**SRI ARUMUGAM FIREWORKS (P) LTD., SIVAKASI.**



Printed by **SRI GANESH INDUSTRIES,** 2/D-4, Arumugam Road, Sivakasi and Published by **Dr. V.K.S.SIVASAKTHI BALAN,** 65, Kuttiananjan Street, Sivakasi on behalf of **GURUKULAM,** Sakthi Clinic Compound, Murugaiahpuram, Vishwanatham - 626 189. Editor : **Dr. V.K.S.SIVASAKTHI BALAN**

GURUKULA THENDRAL ( Tamil Monthly) REGISTERED
Registered with Registar of Newspaper of India No : 63702/95
Postal Registration No. VGR/061/2024-2026
Posted at Sivakasi East Post Office on 16.07.2026

One Place for All Fashion Needs!!

- Fashion Jewellery
- Cosmetics
- Handbags
- Celebration Items
- Head Accessories
- Gifts

KOSALA

Kosala Trends
... A Trend Setting Centre for Girls and Women

Opp. Sivakasi, Arulmigu Sri Mariamman Kovil Theppam

Follow us on
kosala trends



TOYS
HOUSE






34, P.K.S.A. Arumuga Nadar Road,
Sivakasi.

Cell: 94431 56277
94431 21277